| 10. | திரு. ப. சீ. வெங்கடராமன், பி.காம்., | குழுஅலுவலர் |
| 11. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல்., | குழு அலுவலர் |
| 12. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| 13. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ.,பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| 14. | திரு.சா. கணேசன், பி.ஏ.,பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., | சார்புச் செயலாளர் |
| 17. | திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்சி., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம்,<br>பி.எஸ்சி., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. கோ. ஞானப்பிரகாசம்,<br>எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. ஜி.அனீஸ் அகமத்,<br>பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. மா. செல்வராஜ்,<br>பி.எஸ்.சி., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. வெ.சி. சுப்பிரமணியன்,<br>எம்.ஏ., | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. சு. பாலசந்தர்,<br>பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. பு.அ. செல்வராஜ்,<br>பி.எஸ்சி., | சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி. என். துளசிபாய், பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| 26. | திரு, கே. ரவீந்திரன், எம்.ஏ., | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியம்,<br>எம்.ஏ., | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. இரா. வெங்கடேசன்,<br>எம்.ஏ., எல்.எல்.பி., டி.காம்.,<br>டி.ஜே.பி.ஆர்., டி.ஐ.ஆர்., பி.எம்., | தலைமை நிருபர் |
| 29. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள்,<br>எம்.ஏ., பி.லிட்., | தலைமை நிருபர் |
| 30. | திரு. செ. சந்திரகுமார்,<br>எம்.ஏ., | தலைமை நிருபர் |
| 31. | திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல்., | பேரவைத் தலைவரின்<br>தனிச் செயலாளர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

1. அண்ணாமலை, திரு. எஸ். .. ஆலந்தூர்
2. அபரஞ்சி, திரு. பெ. .. அரூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். .. மயிலாடுதுறை
4. அப்பு நடேசன், திரு. இரா. .. திருவட்டாறு
5. அமர்நாத், திரு. ஒ.எஸ். .. மதுரை கிழக்கு
6. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. .. கன்னியாகுமரி
7. அரங்கநாதன், திரு. ஆர்.டி. .. விருத்தாசலம்
8. அரங்கநாயகம், டாக்டர் செ. .. தொண்டாமுத்தூர்
9. அர்ச்சுனன், திரு. க. .. வீரபாண்டி
10. அழகிரி; திரு. ச. .. சிதம்பரம்
11. அறிவழகன், திரு. ஆ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
12. அன்பழகன், திரு. எஸ். .. நாமக்கல் (செ.வ.)
13. ஆசைமணி, திரு. எஸ். .. குத்தாலம்
14. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
15. ஆண்டித் தேவர், திரு. எஸ். .. திருப்பரங்குன்றம்
16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச. .. திருச்சிராப்பள்ளி–1
17. ஆறுமுகம், திரு. செ. .. வானூர் (செ.வ.)
18. ஆனந்தன், திரு. எம். .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

| | | |
|---|---|---|
| 19. | இந்திரகுமாரி, திருமதி இரா. .. | நாட்றாம்பள்ளி |
| 20. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. | மேலூர் |
| 21. | இராசாராமன், திரு. சோ. .. | பாபநாசம் |
| 22. | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 23. | இராதாகிருஷ்ணன், திரு. த.க. .. | திருமங்கலம் |
| 24. | இராமகிருஷ்ணன், டாக்டர் இ. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25. | இராமசாமி அம்பலம், திரு. கே.ஆர் .. | திருவாடனை |
| 26. | இராமசுவாமி, திரு. சி. .. | சங்கராபுரம் |
| 27. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. | கம்பம் |
| 28. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | சாத்தூர் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி |
| 30. | இராமச்சந்திரன், திரு. மா.சா.மா. .. | இளையாங்குடி |
| 31. | இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். .. | செஞ்சி |
| 32. | இராமநாதன், திரு. இராம. .. | கும்பகோணம் |
| 33. | இராம வீரப்பன், திரு. .. | காங்கேயம் |
| 34. | இராஜமன்னார், திரு. சூ.சே. .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 35. | இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. .. | திருத்தணி |
| 36. | இராஜேந்திரன், திரு. பி.வி. .. | வேதாரண்யம் |
| 37. | இலதா பிரியகுமார், திருமதி .. | அரக்கோணம் (செ.வ.) |
| 38. | இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் (செ.வ.) |
| 39. | ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. .. | தாராபுரம் (செ.வ.) |

| | | | |
|---|---|---|---|
| 40. | ஈஸ்வரன், திரு. ஆர். | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41. | ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | .. | பள்ளிப்பட்டு |
| 42. | கண்ணப்பன், திரு. எஸ். | .. | திருப்பத்தூர் |
| 43. | கண்ணன், திரு. வே. | .. | திருவண்ணாமலை |
| 44. | கந்தசாமி, திரு. கே. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 45. | கருப்புசாமி, டாக்டர் எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 46. | கலியபெருமாள், திரு. ப. | .. | திருவையாறு |
| 47. | கலைச்செல்வி, திருமதி கே.எம். | .. | காட்பாடி |
| 48. | கவிநிலவு தர்மராஜ், திருமதி | .. | மொடக்குறிச்சி |
| 49. | கற்பகம் இளங்கோ, திருமதி | .. | காரைக்குடி |
| 50. | கனகவல்லி, திருமதி என். | .. | விளாத்திகுளம் |
| 51. | காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | .. | உத்திரமேரூர் |
| 52. | காந்திராஜன், திரு. ச. | .. | வேடசந்தூர் |
| 53. | காளன், திரு. கோ. | .. | வில்லிவாக்கம் |
| 54. | காளிராஜன், டாக்டர் மு. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 55. | கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. | .. | ஆயிரம்விளக்கு |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ்.எம். | .. | தாம்பரம் |
| 57. | கிருஷ்ணன், திரு. கு.ப. | .. | ஸ்ரீரங்கம் |
| 58. | கிருஷ்ணன், திரு. சி. | .. | ஓமலூர் |
| 59. | குப்பன், திரு. க. | .. | திருவொற்றியூர் |
| 60. | குமரி அனந்தன், திரு. | .. | சாத்தான்குளம் |
| 61. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 62. | குழந்தைவேலு, திரு. சி. | .. | குளத்தூர் (செ.வ.) |

| | | | |
|---|---|---|---|
| 63. | கோடிமாரி, திரு. ஆர். | .. | நாகப்பட்டினம் |
| 64. | கோபாலகிருஷ்ணன், திரு. வே. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 65. | கோபால், டாக்டர் க. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 66. | கோவிந்தராசு, திரு. மா. | .. | ரிஷிவந்தியம் |
| 67. | சக்குபாய், திருமதி ரா. | .. | கும்மிடிப்பூண்டி |
| 68. | சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | .. | திருவள்ளூர் |
| 69. | சஞ்சய் ராமசாமி, திரு. | .. | விருதுநகர் |
| 70. | சண்முகநாதன், திரு. எஸ். | .. | ஆலங்குடி |
| 71. | சண்முகம், திரு. எஸ். வி. | .. | மதுரை மேற்கு |
| 72. | சத்தியமூர்த்தி, திரு. வ. | .. | கடலாடி |
| 73. | சந்திரசேகர், திரு. வி. பி. | .. | பொள்ளாச்சி |
| 74. | சம்பத், திரு. எ. | .. | வாணியம்பாடி |
| 75. | சரஸ்வதி, திருமதி அ. தி. | .. | சத்தியமங்கலம் |
| 76. | சரஸ்வதி, திருமதி ப. | .. | கபிலர்மலை |
| 77. | சரோஜா, டாக்டர் வெ. | .. | சங்கரி (செ.வ.) |
| 78. | சாத்தையா, திரு. தி. | .. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79. | சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | .. | முகையூர் |
| 80. | சிங்காரம், திரு. ஆர். | .. | பேராவூரணி |
| 81. | சிங்காரம், திரு. கே. | .. | மொரப்பூர் |
| 82. | சிங்கை கோவிந்தராசு, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 83. | சியாமளா, திருமதி ரெ. | .. | கோவில்பட்டி |
| 84. | சிவசுப்பிரமணியன், திரு. கு. | .. | குறிஞ்சிப்பாடி |

| | | | |
|---|---|---|---|
| 85. | சிவபதி, திரு. என். ஆர். | .. | தொட்டியம் |
| 86. | சின்னசாமி, திரு. கா. | .. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 87. | சின்னசாமி, திரு. ம. | .. | கரூர் |
| 88. | சின்னசாமி, திரு. வி. கே. | .. | பவானிசாகர் |
| 89. | சின்னப்பன், திரு. கே. கே. | .. | ஜெயங்கொண்டம் |
| 90. | சீனியம்மாள், டாக்டர் மு. | .. | அவினாசி (செ.வ.) |
| 91. | சீனிவாசன், திரு. ஆ. கு. | .. | பெரணமல்லூர் |
| 92. | சீனிவாசன், திரு. கு. | .. | மன்னார்குடி |
| 93. | சுதர்சனம், திரு. டி. | .. | பூந்தமல்லி |
| 94. | சுந்தரசாமி, திரு. எம். | .. | கலசப்பாக்கம் |
| 95. | சுந்தரதாஸ், திரு. மா. | .. | விளவன்கோடு |
| 96. | சுந்தரம், திரு. எம். கே. | .. | தண்டராம்பட்டு |
| 97. | சுந்தரராஜ், டாக்டர் எஸ். | .. | பரமக்குடி (செ.வ.) |
| 98. | சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. | .. | திருப்பத்தூர் |
| 99. | சுந்தராம்பாள், திருமதி செ. | .. | மேட்டூர் |
| 100. | சுப்பிரமணியம், திரு. வ. மு. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 101. | சுப்பிரமணியன், திரு. வீ. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 102. | சுப்புரத்தினம், திரு. ஆ. | .. | பழனி (செ.வ.) |
| 103. | சுலோசனா, செல்வி எல். | .. | மேட்டுப்பாளையம் |
| 104. | சுவாமிநாதன், திரு. சி. | .. | புதுக்கோட்டை |
| 105. | செங்கோட்டையன், திரு. கே. ஏ. | .. | கோபிசெட்டி பாளையம் |
| 106. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. | அண்ணா நகர் |
| 107. | செல்லசாமி, திரு. ஏ. டி. | .. | ஒட்டன்சத்திரம் |

| | | |
|---|---|---|
| 108. | செல்லதுரை, திரு. ஆ. | .. திருச்செந்தூர் |
| 109. | செல்வகணபதி, திரு. டி. எம். | .. திருச்செங்கோடு |
| 110. | செல்வராஜ், திரு. கே. | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 111. | செழியன், திரு. தா. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 112. | சேகர், டாக்டர் எம். பி. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 113. | சேகர், திரு. எம். ஜி. | .. பாலக்கோடு |
| 114. | சொக்கலிங்கம், திரு. பி. | .. மதுராந்தகம் |
| 115. | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | .. தஞ்சாவூர் |
| 116. | ஞானசேகரன், திரு. சி. | .. வேலூர் |
| 117. | டேனியல்ராஜ், திரு. எஸ். | .. ஸ்ரீவைகுண்டம் |
| 118. | தங்கமுத்து, திரு. கு. | .. திருவோணம் |
| 119. | தங்கராஜ், திரு. ஆர். | .. ஆண்டிமடம் |
| 120. | தங்கவேல், திரு. எம். | .. முசிறி |
| 121. | தண்டாயுதபாணி, திரு. வி. | .. குடியாத்தம் |
| 122. | தமிழரசன், திரு. செ. கு. | .. வந்தவாசி (செ.வ.) |
| 123. | தமிழரசு, திரு. வெ. | .. ஆத்தூர் |
| 124. | தம்புசாமி, திரு. வே. | .. திருவாரூர் (செ.வ.) |
| 125. | தருமலிங்கம், திரு. கி. | .. அணைக்கட்டு |
| 126. | தர்மலிங்கம், திரு. பே. | .. பாளையங்கோட்டை |
| 127. | தவசி, திரு. கே. | .. ஆண்டிப்பட்டி |
| 128. | தனபால், திரு. ம. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 129. | தாமரைக்கனி, திரு. இரா. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 130. | தாமோதரன், திரு. எம். சி. | .. நெல்லிக்குப்பம் |

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

131. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி

132. துரை, திரு. எஸ். எம். .. ஆத்தூர்

133. துரைமுருகன், திரு. கே. எஸ். .. பல்லடம்

134. துரை ராமசாமி, திரு. .. வெள்ளக்கோவில்

135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

136. தென்னவன், திரு. மு. .. இராமநாதபுரம்

137. தேவராஜ், திரு. அ. .. செய்யாறு

138. தேனி பன்னீர்செல்வம், திரு. .. போடிநாயக்கனூர்

139. நடேசன், திரு. மு. .. சேலம்-2

140. நடேசன் பால்ராஜ், திரு. வெ. .. நாங்குநேரி

141. நாகூர் மீரான், திரு. எஸ். .. கடையநல்லூர்

142. நிர்மலா, திருமதி பி. .. திண்டுக்கல்

143. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. .. தேனி

144. பஞ்சவர்ணம், திருமதி கே. .. வலங்கைமான் (செ.வ.)

145. பட்டாபிராமன், திரு. கா. ப. .. காஞ்சிபுரம்

146. பரந்தாமன், டாக்டர் ஜெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

147. பரமசிவம், திரு. ஆர். பி. .. சின்னசேலம்

148. பரமசிவன், திரு. ஏ. எம். .. சோழவந்தான்

149. பலராமன், திரு. உ. .. பூங்கா நகர்

150. பழனிசாமி, திரு. இரா. .. தாரமங்கலம்

151. பழனிசாமி, திரு. க. .. எடப்பாடி

152. பழனிசாமி, திரு. நா.சா. .. கிணத்துக்கடவு

153. பழனிசாமி, திரு. வெ. .. திருப்பூர்

| | | | |
|---|---|---|---|
| 154 | பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 155. | பழனியம்மாள், திருமதி க. | .. | ராசிபுரம் |
| 156. | பன்னீர்செல்வம், திரு. என். | .. | திருவிடைமருதூர் |
| 157. | பன்னீர்செல்வம், திரு. சா. | .. | திண்டிவனம் |
| 158. | பன்னீர்செல்வம், திரு. ஜெ. | .. | திருநாவலூர் |
| 159. | பாண்டியம்மாள், திருமதி இரா. | .. | உசிலம்பட்டி |
| 160. | பாப்பா சுந்தரம், திரு. அ. | .. | குளித்தலை |
| 161. | பாலகங்காதரன், திரு. ஜெ. | .. | சிவகாசி |
| 162. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. | முதுகுளத்தூர் |
| 163. | பாலசுப்பிரமணியன், திரு. கி. | .. | பட்டுக்கோட்டை |
| 164. | பாலசுப்பிரமணியன், திரு. வெ. | .. | மயிலாப்பூர் |
| 165. | பாலசுப்ரமணியன், திரு. எஸ்.ஆர். | .. | பொங்கலூர் |
| 166. | பாலன், திரு. எம்.கே. | .. | சைதாப்பேட்டை |
| 167. | பாலையா, திரு. ஆ. | .. | குளச்சல் |
| 168. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | .. | தென்காசி |
| 169. | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | .. | சேரன்மகாதேவி |
| 170. | புரட்சிமணி, திரு. ச. | .. | மங்களூர் (செ.வ.) |
| 171. | புருஷோத்தமன், டாக்டர் ஆ. வெ. | .. | பெண்ணாகரம் |
| 172. | பூராசாமி, திரு. எம். | .. | பூம்புகார் |
| 173. | பெரியசாமி, திரு. ம. | .. | பெருந்துறை |
| 174. | பெரியசாமி, திரு. வே. | .. | அந்தியூர் (செ.வ.) |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

175. பெரியவீரன், திரு. எம். .. பெரியகுளம்

176. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ம.ப.)

177. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

178. பொன்னுசாமி, பேராசிரியர் க. .. மருங்காபுரி

179. பொன்னுசாமி, திரு. பெ. .. தருமபுரி

180. பொன்னுவேலு, திரு. ஏ.தா. .. வரகூர் (செ.வ.)

181. போளூர் வரதன், திரு. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

182. மணிமேகலை, டாக்டர் சு. .. அரியலூர்

183. மணிமேகலை, திருமதி வி.ஜி. .. அருப்புக்கோட்டை

184. மணிவாசகம், திரு. கே.பி. .. உடுமலைப்பேட்டை

185. மதுசூதனன், திரு. இ. .. டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்

186. மரியம் உல் ஆசியா, திருமதி கே. .. அரவக்குறிச்சி

187. மல்லிகா, செல்வி கோ. .. புவனகிரி

188. மனோகரன், திரு. கே.ஏ. .. ஓசூர்

189. மாணிக்கம், திரு. சி. .. ஈரோடு

190. மாலா, டாக்டர் ஜி.ஆர். .. திருச்சிராப்பள்ளி-2

191. முத்துசாமி, திரு. சு. .. பவானி

192. முத்தையா, திரு. இரா. .. சேடப்பட்டி

193. முருகானந்தம், திரு. கே.ஆர். .. சிவகங்கை

194. முருகையா பாண்டியன், திரு. ஆர்... அம்பாசமுத்திரம்

195. முனிரத்தினம், திரு. ஏ.எம். .. சோளிங்கர்

| | | | |
|---|---|---|---|
| 196. | முனிவெங்கடப்பன், திரு. கே. | .. | கிருஷ்ணகிரி |
| 197. | முனுசாமி, திரு. கா. பூ. | .. | காவேரிப்பட்டினம் |
| 198. | முஹமது ஆசிப், திரு. | .. | திருவல்லிக்கேணி |
| 199. | மூர்த்தி, திரு. து. | .. | சீர்காழி (செ.வ.) |
| 200. | மோகனன், திரு. கோவி.எஸ். | .. | இராணிப்பேட்டை |
| 201. | மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 202. | ரகுபதி, திரு. சே. | .. | திருமயம் |
| 203. | ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 204. | ரத்தினவேல், திரு. த. | .. | திருவெறும்பூர் |
| 205. | ரமணி நல்லதம்பி, திருமதி | .. | ராதாபுரம் |
| 206. | ரமேஷ், திரு. வி.பி.ஆர். | .. | தூத்துக்குடி |
| 207. | ரவிக்குமார், திரு. ஏ. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 208. | ரவிச்சந்திரன், திரு. வி. | .. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 209. | ராமசுப்பு, திரு. எஸ்.எஸ். | .. | ஆலங்குளம் |
| 210. | ராஜூ, திரு. எச்.எம். | .. | உதகமண்டலம் |
| 211. | ராஜூ, திரு. கே.ஆர். | .. | கூடலூர் |
| 212. | ராஜூ, திரு. கே.பி. | .. | பேரூர் |
| 213. | ராஜேந்திரன், திரு. என்.ஆர். | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 214. | லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 215. | லாரன்ஸ், திரு. கு. | .. | பத்மநாபபுரம் |
| 216. | லோகாம்பாள், திருமதி ஜெ. | .. | லால்குடி |
| 217. | வரதராஜன், திரு. செ.து. | .. | செங்கல்பட்டு |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| | | | |
|---|---|---|---|
| 218. | வீரபாண்டியன், டாக்டர் பெ. | .. | செங்கம் (செ.வ.) |
| 219. | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | .. | தளி |
| 220. | வெங்கடேசன், திரு. பி.ஆர்.எஸ். | .. | கடலூர் |
| 221. | வேடியப்பன், திரு. தா. | .. | போளூர் |
| 222. | வேலையா, திரு. டி. | .. | திருநெல்வேலி |
| 223. | ஜனார்தனன், திரு. தே. | .. | விழுப்புரம் |
| 224. | ஜானகிராமன், திரு. கோ. | .. | மேல்மலையனூர் |
| 225. | ஜீனத் சர்புதீன், திருமதி | .. | சேப்பாக்கம் |
| 226. | ஜெயகுமார், திரு. டி. | .. | ராயபுரம் |
| 227. | ஜெயக்குமார், திரு. எஸ். | .. | தியாகராயநகர் |
| 228. | ஜெயராமன், திரு. எஸ்.ஆர். | .. | சேலம்-1 |
| 229. | ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | .. | பர்கூர் |
| 230. | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | .. | ஆரணி |
| 231. | ஸ்ரீதரன், டாக்டர் அ. | .. | வால்பாறை (செ.வ.) |
| 232. | பிட்ரிக்ஸ் டி' சோசா, டாக்டர் | .. | நியமனம் |
| 233. | (வெற்றிடம்) | .. | ஒரத்தநாடு |
| 234. | (வெற்றிடம்) | .. | ஆற்காடு |
| 235. | (வெற்றிடம்) | .. | துறைமுகம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

கிருஷ்ணமூர்த்தி, திரு. ஆர். .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 20, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

## 1995, நவம்பர் 6, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

நேற்று இருந்த ஒருவர் இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமையாகிய பெருமையை இந்த மண்ணுலகு பெற்றுள்ளது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கல் தீர்மானம்

### இஸ்ரேல் பிரதமர் இட்ஸ்ஹாக் ரபின் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இஸ்ரேல் நாட்டின் பிரதமரும், உலக சமாதானத்திற்கு பண்டித நேரு காட்டிய சமாதான வழிமுறையை தன்னுடைய வாழ்நாளில் கடைப்பிடித்து வந்தவருமான இஸ்ரேல் பிரதமர் இட்ஸ்ஹாக் ரபின் அவர்கள், தீவிரவாத கும்பலைச் சார்ந்த ஒருவனால் படுகொலை செய்யப்பட்ட செய்தியை, இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இறந்த அப்பெருமகனாருக்குப் பேரவையின் சார்பில் இரங்கல் தெரிவிக்கும் இரங்கல் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இப்போது முன்வைப்பார்கள்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [*1995 நவம்பர் 6*

"இஸ்ரேல் நாட்டின் பிரதமரான திரு. இட்ஸ்ஹாக் ரபின் அவர்கள் தனது *73*-வது வயதில் சனிக்கிழமை அன்று இரவு ஒரு அமைதிப் பேரணியில் பங்கேற்றுக் கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் துயரமும் கொள்கிறது.

*1922*-ஆம் ஆண்டு ஜெருசலேம் நகரில் பிறந்த அவர் தனது *18*-வது வயதிலேயே இராணுவத்தில் சேர்ந்தார். *1963*-ஆம் ஆண்டு முதல் *1968* ஆம் ஆண்டு வரை, இஸ்ரேல் நாட்டு இராணுவத்தின் தளபதியாகத் திகழ்ந்தார்.

பின்னர் *1992* ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் சார்ந்த தொழிலாளர் கட்சி வெற்றி பெற வழிவகுத்ததுடன், அந்நாட்டின் பிரதமராகவும் பொறுப்பேற்றார். இஸ்ரேலுக்கும் பி.எல்.ஓ. அமைப்பிற்கும் அமைதி ஒப்பந்தம் ஏற்பட வழிவகுத்து இதற்காக யாசர் அராபத்திற்கும், இவருக்கும் *1994* ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பெற்றது.

முற்பகல் *10-05*

தன் தேச அமைதிக்காக மட்டுமல்லாமல், உலக சமாதானத்திற்கே வழிவகுக்கும் நடவடிக்கைகளை ஒன்றன்பின் ஒன்றாக நடைமுறைப்படுத்தி வந்த சமாதானச் சிற்பி ஒருவர், தீவிரவாத வன்முறைக் கும்பலைச் சார்ந்த ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை இப்பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது.

அன்னாரது மறைவு குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது"

என்ற இந்த இரங்கல் தீர்மானத்தை இந்த அவையின் ஒப்புதலுக்கு நான் முன்மொழிகிறேன்.

இஸ்ரேல் நாட்டினுடைய பிரதமராக விளங்கி, அண்மைக் காலத்தில் உலக நாடுகளிலே உள்ள அத்தனைப் பேராலும் மிகவும் வரவேற்கப்பட்டவராகவும், போற்றிப் பாராட்டப்பட்டவராகவும் விளங்கிய திரு. இட்ஸ்ஹாக் ரபின் அவர்கள் ஒரு அமைதிப் பேரணியில் கலந்துகொண்டுவிட்டு, அதுவும் ஒரு இலட்சம் பேர் கூடியிருந்த அந்த அமைதிப் பேரணியில் கலந்துகொண்டுவிட்டு, மேடையைவிட்டு இறங்கும்போது ஒரு கல்லா களிமகனால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற அதிர்ச்சிகரமான செய்தி எல்லோரையும் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறது. யூதர் வகுப்பைச் சார்ந்த தீவிரவாதிகளின் இயக்கத்தினுடைய தொண்டனாக இருக்கின்ற அமீர் என்ற ஒரு

கொடியவனால் அவர் சுடப்பட்டிருக்கின்றார். திரு. இட்ஸ்ஹாக் ரபின் அவர்கள் அண்மைக் காலத்தில் உலக மக்களால் பாராட்டத்தக்க அளவிற்கு, போற்றத்தக்க அளவிற்கு அமைதிக்காகப் பாடுபட்டு, அதிலே வெற்றி கண்டவர்.

1948–ஆவது ஆண்டு இஸ்ரேல் நாடு ஒரு தனி நாடாக ஆனதற்குப் பிறகு, அங்கே பல்வேறு பிரதமர்கள் வந்திருக்கிறார்கள். என்றாலும்கூட, அந்த இஸ்ரேல் நாட்டிற்கும் பக்கத்திலே இருக்கின்ற பாலஸ்தீனம் நாட்டிற்கும் போர் மூண்டு அடிக்கடி கலவரங்கள் எல்லாம் ஏற்பட்டு, ஐக்கிய நாடுகள் அவை, பல தடவை முயன்றபோதும்கூட முடியாத அளவிற்குத் தொடர்ந்து போர் நடக்கின்ற அளவிற்கு ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலைகளை மாற்றி அங்கே ஒரு அமைதி நிலையை ஏற்படுத்தி, பாலஸ்தீன நாட்டிற்கும், இஸ்ரேல் நாட்டிற்கும் இடையே ஒற்றுமையும், நட்புறவுத் தன்மையும் ஏற்படுவதற்குப் பாடுபட்டவர்களிலே திரு. ரபின் அவர்கள் மிக மிக முக்கியமானவர்கள் ஆவார்கள். திரு. ரபின் அவர்களும் திரு. அராபத் அவர்களும் சேர்ந்து இஸ்ரேல்–பாலஸ்தீனப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அரும்பாடுபட்டு, அதை நிலைநாட்டினார்கள் என்பதற்காகத்தான் 1994–ஆவது ஆண்டு அமைதிக்காகப் பாடுபட்டவர்களுக்கு அளிக்கப்படுகின்ற நோபல் பரிசு இருவருக்கும் ஒரே சமயத்தில் தரப்பட்டது. அதுமட்டுமல்லாமல், உலக அமைதிக்கும், மிக மிகப் பாடுபடுகின்ற ஒருவராக திரு. ரபின் அவர்கள் விளங்கினார்கள். இந்தியா எப்போதும் உலக அமைதியை விரும்புகின்ற தன்மையிலேதான் தன்னுடைய அன்னிய நாட்டுக் கொள்கையையும் சரி, உள்நாட்டுக் கொள்கையையும் சரி, வைத்துக்கொண்டு வருகின்றதற்கு ஏற்ப, அமைதி நிலவவேண்டுமென்ற கருத்தினுடைய அடிப்படையிலே, அண்ணல் காந்தியடிகள் வகுத்துத்தந்த கொள்கையினுடைய அடிப்படையிலே நடைபோட்டு வருகின்ற நாம், அமைதியை விரும்புகின்றோம். நாம் விரும்புகின்ற அமைதிக்கு ஏற்ப ரபின் அவர்கள் அமைதியை நிலைநாட்டுவதிலே தன்னுடைய நேரத்தையும், நினைப்பையும், தன்னுடைய உழைப்பையும், அறிவையும், ஆற்றலையும் மிகச்சிறப்பாகப் பயன்படுத்திவந்தார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இந்திய மக்களின் சார்பாக இந்திய நாட்டின் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களும் இரங்கல் தீர்மானத்தை உடனடியாகத் தெரிவித்து, அவர் அமைதிக்காகப் பாடுபட்ட பாங்கையும் எடுத்துச்சொல்லி, இந்திய மக்கள் அனைவரின் சார்பாக இரங்கலையும் அவர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சிறந்த ஒருவர், அமைதிக்காகப் பாடுபட்ட ஒருவர், எடுத்துக்காட்டாக விளங்கிய

ஒருவர் படுகொலைக்கு ஆளான தன்மையைக் கண்டித்து அவருடைய மறைவு குறித்து இரங்கல் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு உடையதாக இந்தப் பேரவையும் இருக்கின்றது. இப்படிப்பட்ட படுகொலைகளின் மூலமாக உள்ளபடியே உலகத்திலே நல்லதொரு சூழ்நிலை ஏற்படாது. ஆகவே, அத்தனைப் பேரும் கண்டிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறோம். சுட்டுக் கொன்ற அமீர் கூட ஆண்டவன் கட்டளையை ஏற்றுத்தான் நான் சுட்டுக் கொன்றேன் என்று அவன் பதில் சொல்லியிருக்கிறான். இப்படி ஒரு சமாதானத்தை எல்லோரும் சொல்வார்களேயானால் உலகத்திலே நடக்கிற கொலைகளுக்கெல்லாம் ஆண்டவன் தான் கட்டளையிட்டான் என்ற நிலைமை ஏற்பட்டு விடும். ஆனால், இந்த அமீர் ஆண்டவன் சொல்லித்தான் நான் சுட்டேன் என்று சொல்வது எவ்வளவு கொடிய ஒரு தன்மை என்பதை நாம் நன்கு உணர்வோம். ஆனால் அமைதிக்குப் பாடுபட்டவர்கள் பக்கம் இந்த உலகம் இருக்கிறது. குறிப்பாக இந்தியா இருக்கிறது, குறிப்பாக தமிழகமும் இருக்கிறது, இந்தப் பேரவையும் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கின்றவகையில் படுகொலைக்கு ஆளான அவருடைய மறைவு குறித்து ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, இஸ்ரேல் நாட்டு மக்கள் அத்துணை பேருக்கும் இந்தப் பேரவையின் சார்பாக நம்முடைய அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு அவையினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் மாலை, இஸ்ரேலிய பிரதமர் இட்ஸ்ஹாக் ரபின் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு புதிதாக உருவாக்கப்பட்ட நாடு இஸ்ரேல். அந்த நாடு உருவாக்கப்பட்ட நாளிலேயிருந்து, அந்த பிராந்தியத்திலே அமைதி நிலவவில்லை. 1948-ஆம் ஆண்டிலேயிருந்து பல பிரதமர்கள் அந்த நாட்டிலே இருந்திருக்கிறார்கள். மிக நீண்ட காலம் ஆட்சி செய்த பென்கூரியனிலிருந்து பல பிரதமர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அந்த நாட்டிலே ஒரு நிரந்தரமான அமைதிக்கு அவர்களாலே வழி காண முடியவில்லை. முதன் முறையாக அந்த முயற்சியிலே ஈடுபட்டு வெற்றியும் பெற்றவர் இட்ஸ்ஹாக் ரபின் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 6]* [திரு. எஸ்.ஆர். பாலசுப்ரம்மணியன்]

*1993*-ஆம் ஆண்டு பாலஸ்தீன மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, பாலஸ்தீன மக்களுடைய உரிமைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களோடு சமாதான உடன்படிக்கை காண்பதனால் மட்டுமே அந்தப் பிராந்தியத்திலே நிரந்தரமான அமைதிக்கு வழி காண முடியும் என்பதை உணர்ந்து, பாலஸ்தீனிய மக்களுடைய தலைவரான யாசர் அராபத்-உடன் ஒரு சமாதான உடன்படிக்கையை மேற்கொண்டார். அந்த உடன்படிக்கை உலகம் முழுவதும் பாராட்டப்பட்ட ஒரு உடன்படிக்கை. அந்தப் பிராந்தியத்திலே நிரந்தரமான அமைதிக்கு இது வழி வகுக்கும் என்று பலரும் எண்ணினார்கள். அந்த உடன்படிக்கையைக் கண்டதன் காரணமாக சென்ற ஆண்டு *1994*-ல் இட்ஸ்ஹாக் ரபின் அவர்களுக்கும், யாசர் அராபத் அவர்களுக்கும் நோபல் சமாதான பரிசு தரப்பட்டது. இந்த மாதம் மேற்குக் கரையிலேயிருந்து முழுவதுமாக இஸ்ரேலியப் படைகள் திரும்பப் பெறப்பட்டதற்குப் பிறகு பாலஸ்தீனிய தேர்தல்கள் அடுத்த மாதம் நடைபெறுவதாக இருந்தன.

அது மட்டும் அல்லாமல், அவர்கள் மரணம் அடைவதற்கு முன்பு சென்ற செப்டம்பர் மாதம் ஜோர்டான் நாட்டோடு ஒரு சமாதான உடன்படிக்கையை மேற்கொண்டார்கள். ஆக, காலமெல்லாம் உலக சமாதானத்திற்காக வாழ்ந்தவர் ரபின் அவர்கள். அவர் சாவதற்கு முன்பு கூட அவர் டெல்அவின் நகரத்தில் பிரம்மாண்டமான அளவில் இலட்சம் பேர்களுக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு நடத்திய அமைதிப் பேரணியிலே கலந்து கொண்டு உரையாற்றிவிட்டு, அவர் கீழே இறங்கி வந்து காரிலேயே ஏறி வீட்டுக்குத் திரும்புகின்ற யத்தனத்திலே தான், அந்த எத்தன் தன்னுடைய துப்பாக்கியிலேயிருந்து *3* ரவைகளை சுட்டு அவரைக் கொன்றிருக்கிறான். ஆக இன்றையதினம் அமைதியை விரும்புகின்றவர்கள் எல்லாம் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேலிய மக்கள் அவருடைய மறைவிலே ஒரு சமாதானப் புறாவை இழந்து விட்டதாகக் கருதுகிறார்கள். இஸ்ரேலிய நாடு தோன்றிய நாளிலேயிருந்து அவர் ஆற்றிய பணிகள் குறித்து அவை முன்னவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர் படை வீரனாக எப்படி பணியாற்றினார் அவர் இளமையிலேயிருந்து எப்படிப்பணியாற்றினார் என்பதையெல்லாம் அவர்கள் இங்கே எடுத்துக் சொன்னார்கள். ஒரு படைவீரனாக, அரசியல் வாதியாக, ராஜதந்திரியாக, சமாதானத் தூதுவராக இஸ்ரேலிய நாட்டை வழி நடத்திச் சென்றார் ரபின் அவர்கள். *30* ஆண்டுகளுக்கு முன்பு ஜான் கென்னடியை இழந்தபோது எப்படி அமெரிக்க மக்கள்

தத்தளித்தார்களோ, கண்ணீர் விட்டார்களோ, திசை தெரியாமல் நாம் இருக்கிறோம் என்று நினைத்தார்களோ அதுபோல, அண்மையிலே எகிப்து நாட்டினுடைய அதிபர் அன்வர் சதத் அவர்கள் கொலை செய்யப்பட்டபோது, அந்த நாட்டு மக்கள் எப்படித் தவித்தார்களோ, *1984*-ஆம் ஆண்டில் இந்திய நாட்டில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட நேரத்தில், இந்திய மக்கள் திசை தெரியாமல், தங்களை வழி நடத்திச் செல்லக்கூடிய ஒரு அன்னை நம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்று எப்படிக் கண்ணீர் வடித்தார்களோ, ராஜீவ் காந்தியினுடைய மரணத்திலே-பிரதமராக இல்லாவிட்டாலும் கூட டி-பெக்டோ பிரைம் மினிஸ்டராக இருந்த போதிலும் கூட நம்முடைய நாட்டு மக்கள் மட்டும் அல்ல, உலக நாட்டு மக்கள் எல்லாம் ஏற்றுக்கொண்ட அவரை இழந்து, இந்தியா என்ன செய்யப் போகிறது என்று எப்படி கண்ணீர் வடித்தார்களோ, அதைப் போன்ற ஒரு சூழ்நிலை இன்றையதினம் அங்கே ஏற்பட்டிருக்கிறது. அந்த நாட்டில் அனுஷ்டிக்கும் இரண்டு நாள் துக்கம் என்பது பிராயச்சித்தமாகவும், பரிகார ஜெபமாகவும் அங்கே இன்றையதினம் கருதப்படுகிறது. இஸ்ரேல் மக்கள் இன்றையதினம் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேலுக்கு மட்டும் அவருடைய மரணம் ஒரு இழப்பு அல்ல. உலக நாடுகள் அனைத்திற்கும் அது ஓர் இழப்பு. சமாதானத்தை விரும்புகிறவர்கள் அத்தனைப்பேருக்கும் அது ஒரு பேரிழப்பு. அவருடைய இழப்பினாலே வாடுகின்ற இஸ்ரேல் நாட்டு மக்களுக்கும், சமாதனாத் தூதுவர்கள் அத்தனைப் பேருக்கும் இந்த அவையின் சார்பிலே முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தையொட்டி காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும், எதிர்க்கட்சியின் சார்பிலேயும் இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. தம்புசாமி.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள், இஸ்ரேல் நாட்டின் பிரதமரைச் சுட்டுக் கொன்றதைக் குறித்து ஓர் தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கிறார்கள். இஸ்ரேல் நாட்டுப் பிரதமர் தொடர்ந்து அமைதி நிலவ வேண்டும் என்பதற்காகத்தான் முயற்சி எடுத்தார்கள் என்பதும், அதில் வெற்றி கண்டார்கள் என்பதும், இந்த உலகத்திலே ஒரு பரிசு பெறக்கூடிய

1995 நவம்பர் 6] [திரு. வே. தம்புசாமி]

அளவிற்கு அவருடைய அமைதி செயலாற்றியிருக்கிறது என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். அந்தவகையிலே இஸ்ரேல் நாட்டுப் பிரதமர் அவர்களைச் சுட்டுக் கொன்றதை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வன்மையாகக் கண்டிப்பதோடு, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து, சுட்டுக் கொல்லப்பட்ட பிரதமர் அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அந்நாட்டு மக்களுக்கும், அரசுக்கும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலேயும், எனது சார்பிலேயும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்ரேல் நாட்டினுடைய பிரதமர் இட்ஸ்ஹாக் ரபின் அவர்கள் கோரமான முறையில் கொலையுண்டது குறித்த இரங்கல் தீர்மானத்தை நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். அந்த கோரமான கொலை என்பது நம்முடைய தேசத்திலும், எந்த ஒரு கண்டத்திலும், எந்த ஒரு மனிதரும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கண்டனத்திற்குரிய செயல். குறிப்பாக, பொது வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டு, அந்தந்த தேசத்தினுடைய நலனுக்காகப் பணியாற்றக்கூடிய மாபெரும் தலைவர்கள் இது போன்ற கோரக் கொலைக்கு ஆளானது எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாக அமைந்து இருக்கிறது. அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தை இங்கே முன்மொழிந்து சுருக்கமாகச் சொன்னார்கள். குறிப்பாக, பாலஸ்தீன மக்களுக்கும், இஸ்ரேலுக்கும் ஏற்பட்டிருக்கிற தொடர்ச்சியான பல்வேறு யுத்தக் கலவரங்கள் தொடர்ந்திருந்த அந்தச் சூழ்நிலையில், ரபின் அவர்கள் இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் அதை விட்டு அரசியலிலே தன்னுடைய பணியை உயர்த்தி அந்த நாட்டினுடைய பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னால்தான் அவர் பாலஸ்தீன மக்களோடு ஒரு உடன்பாட்டை, நெருக்கமான உணர்வுகளை மேற்கொண்டார். அதோடு மட்டும் அல்லாமல் அவர் துவக்கிய கட்சி என்பது ஒரு தொழிலாளர் நலக்கட்சி. அந்தக் கட்சியின் மூலமாக அந்த நேரத்தில் ஆட்சிக்கு வந்தார் என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். அந்த இஸ்ரேல் நாட்டுக்கு ஏகாதிபத்திய நாடுகள் முழுமையான ஆதரவு கொடுத்து, அந்த நாட்டினுடைய இனக்கலவரங்களைத் தூண்ட வேண்டும் என்பதற்காகவே ஊக்குவித்துக் கொண்டிருந்த ஒரு

சூழ்நிலையில் இருந்து மாற்றிய ஒரு மாபெரும் மாமனிதர். அவருடைய இழப்புக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே அறிவித்திருக்கிற அந்த இரங்கல் தீர்மானத்தோடு, என்னுடைய அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி இளம்வழுதி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்ரேல் நாட்டுப் பிரதமரின் துயரமான மறைவு குறித்து நம்முடைய அவை முன்னவர் முன்மொழிந்துள்ள இந்த இரங்கல் தீர்மானத்திலே, இந்தப் பேரவை கொண்டிருக்கிற உணர்வோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய உணர்வுகளையும் பகிர்ந்து கொள்கிறேன். கல்வாரியின் கருணைப் பிதா இயேசுபிரான் தோன்றிய எருசலேம் நகரத்திலே பிறந்த பெருமைக்குரிய ரபின் அவர்கள் மறைவு குறித்து பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்திகளைப் பார்க்கும் போது, அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளைப் பார்க்கின்றபோது, 18 வயதிலே இராணுவத்திலே சேர்ந்து அவர் படிப்படியாக கமாண்டராக, இராணுவத் தளபதியாக உயர்ந்து இஸ்ரேல் நாட்டுக்கு அவர் வெற்றிகளைத் தேடித்தந்திருக்கிறார்.

*முற்பகல் 10–20*

அது மட்டுமல்ல. பின்னர் அரசியலிலே அவர் ஈடுபட்டு 1992-ஆம் ஆண்டு இஸ்ரேலிலே தொழிலாளர் கட்சி வெற்றிபெறச் செய்ததோடு அந்தக் கட்சியின் சார்பிலே பிரதமராக ஆனவர். அதுமட்டுமல்ல, இஸ்ரேலிய நாட்டிற்கும், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் அடிக்கடி நடைபெற்று வந்த மோதல்களை ஐ.நா. பொது மன்றமே தலையிட்டும்கூட தீர்த்து வைக்க முடியாத நிலையிலே நம்முடைய ரபின் அவர்கள் யாசர் அராஃபத் அவர்களுடைய தலைமையிலே இயங்குகின்ற பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் இஸ்ரேலுக்கும் ஒரு அமைதி ஒப்பந்தம் உருவாக வழிவகைக் கண்டவர். அப்படிப்பட்டவர், அமைதிக்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு வாழ்ந்த அந்த பெருமகனார் இஸ்ரேல் நாட்டின் தலைநகரில் நடைபெற்ற ஒரு அமைதிப் பேரணியில் இலட்சக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட அந்தப் பேரணியிலே கொடியவன் ஒருவனால் பயங்கரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார். மனித நேயத்தை விரும்புகின்ற எவரும் உலக அமைதியை விரும்புகின்ற எவரும் கொடூரமான முறையிலே

*1995 நவம்பர் 6]* [திரு. இளம்வழுதி]

சுட்டுக்கொன்ற அந்தத் தன்மைக்குக் கண்டனம் தெரிவித்துக்கொள்வார்கள். அதுமட்டுமல்ல, இங்கே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அன்னை இந்திரா காந்தி அவர்களும், மறைந்த பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டபோது இந்திய தீபகற்பம் எப்படி கண்ணீரில் மிதந்ததோ, அதுபோல இன்றைக்கு இஸ்ரேல் நாடு, இஸ்ரேல் நாட்டு மக்களின் கண்ணீரில் மிதந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இஸ்ரேல் நாட்டு மக்களின் ஒப்பற்றத் தலைவராக விளங்கிய இட்ஸ்ஹாக் ரபின் அவர்களுடைய மறைவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஆண்டித் தேவர்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இஸ்ரேல் பிரதமர் அவர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதன் காரணமாக இந்த அவையிலே அவை முன்னவர் அவர்கள், தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை அகில இந்திய பார்வேர்டு ப்ளாக் கட்சியின் சார்பில் நான் வழிமொழிய விரும்புகிறேன்.

ரபின் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். இளம் வயதிலேயே அவர் அந்த நாட்டு மக்களுக்காகப் பாடுபட்டார். படையிலே சேர்ந்து படைத் தளபதியாக இருந்தார். 48 ஆண்டுகளுக்கு முன்னால் புதிதாக உருவாக்கப்பட்ட நாடாக இருந்ததால் பக்கத்திலே இருந்த பாலஸ்தீனிய நாட்டிற்கும், அந்த நாட்டிற்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு வந்தன. உலக நாடுகள் அத்தனையும் சேர்ந்து, ஐ.நா. சபை கூட தலையிட்டு தீர்க்க முடியாத நிலையில் இருந்த அந்தப் பிரச்சினையை, படைத் தலைவராக இருந்தவர் தொழிலாளர் கட்சியைச் சார்ந்த அந்த நாட்டினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த நாட்டினுடைய பிரதமராக வந்து இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் இருந்த அந்தப் பிரச்சினையை அமைதியாகத் தீர்த்து வைத்து, அதற்காக பாலஸ்தீனத்தைச் சார்ந்த அராஃபத் அவர்களுக்கும் ரபின் அவர்களுக்கும் உலக சமாதான பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பரிசைப் பெற்றவர், சமாதானப் பிரியர், இறக்கின்ற தினத்தன்றுகூட மிகப் பெரிய சமாதான மாநாட்டிலே கலந்துகொண்டு திரும்ப காரிலே ஏறுகின்றபோதுதான் அவர் படுகொலை

செய்யப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட சமாதானப் பிரியரின் இழப்பு இஸ்ரேலுக்கு மட்டுமல்ல சமாதானத்தை விரும்புகின்ற அத்தனை நாட்டு மக்களுக்கும் பேரிழப்பாகும். அவருடைய இழப்பிற்கு அகில இந்திய பார்வேர்டு ப்ளாக் கட்சியின் சார்பிலே இரங்கலைத் தெரிவிப்பதோடு, இஸ்ரேல் நாட்டு மக்களுக்கும் எங்களது இயக்கத்தின் சார்பாக இரங்கலைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்ரேல் நாட்டுப் பிரதமர் இட்ஸ்ஹாக் ரபின் அவர்கள் கொடூரமாக சுட்டுக்கொல்லப்பட்டது குறித்து இந்த அவையில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை வழிமொழிந்து, இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் சில இரங்கல் கருத்துக்களை நானும் குறிப்பிட விரும்புகிறேன். இஸ்ரேல் பிரதமர் இட்ஸ்ஹாக் ரபின் அவர்களும், பாலஸ்தீனிய அதிபர் யாசர் அராஃபத் அவர்களும் உலக சமாதானத்திற்கான பரிசைப் பெற்றவர்கள். அத்தகைய மாபெரும் சமாதான வித்தகர் இத்தகைய ஒரு அமைதிப் பேரணியிலே இலட்சக்கணக்கான இஸ்ரேல் நாட்டு மக்கள் முன்னாலே கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டதை மனித நேயத்திலும், ஜனநாயகத்திலும், சகோதரத்துவத்திலும் உணர்வு கொண்ட யாரும் அவ்வளவு எளிதாகப் பொறுத்துக்கொள்ள முடியாது. உலகம் முழுவதுமே வன்முறைகள் இன்றைக்கு இந்த அளவிலே மிகக் கொடூரமாக இருக்கின்றன என்கிறபோது ஜனநாயகத்திலே மனித நேயத்திலே அக்கறை உள்ளவர்கள் கண்ணீர் விட்டாக வேண்டும். இஸ்ரேல் நாட்டு மண்ணிலே பிறந்து, ஒரு கன்னத்திலே அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு என்று உலகத்திற்கே சமாதானத்தை வித்திட்ட ஏசு பிறந்த மண்ணிலே இத்தகைய கொடூரம் நிகழ்ந்துள்ளது மிகுந்த வேதனை அளிக்கிறது. அவரது மறைவுக்கு இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே எங்கள் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு அவை முன்னவரின் தீர்மானத்தை வழிமொழிந்து, அமைகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சா. பழனிசாமி.

**திரு. நா.சா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற இஸ்ரேலியப் பிரதமர் இட்ஸ்ஹாக் ரபின் அவர்களுடைய துயரகரமான முடிவு பற்றி,

*1995 நவம்பர் 6]* [திரு. நா.சா. பழனிசாமி]

அவருடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற வகையிலே கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தின்மீது உழவர்-உழைப்பாளர் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இஸ்ரேல் நாடு என்பது, இரண்டாயிரம் ஆண்டுகள் நாடற்று சிதறிக் கிடந்த யூத மக்களைத் தாயகமாகக் கொண்ட நாடு. 1945-லே அந்நாடு உருவானதிலிருந்து அதே மண்ணிலே வாழ்ந்த பாலஸ்தீனியர்களுக்கும் அவர்களுக்கும் இடைவிடாத போர் இதுகாறும் நடந்து வந்திருக்கிறது. அரேபிய நாடுகள் இஸ்ரேல் என்ற ஒரு நாட்டையே அங்கீகரிக்க மறுத்தன. இப்படி சமாதானமே ஏற்படாத ஒரு பகுதியாக, யுத்தத்தின் பகுதியாக இருந்த அந்த மேற்காசியப் பகுதியிலே இஸ்ரேலியப் பிரதமராக வந்த இட்ஸ்ஹாக் ரபின் அவர்கள், இராணுவத் தலைவராக இருந்தவரும் ஆவார். இஸ்ரேலும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திலே இருந்த பாலஸ்தீன விடுதலைப் போராட்டத் தலைவர் யாசர் அராபத் அவர்களும் ஒன்றுபட்டு சமாதானத்தில் ஈடுபடுவார்களா என்ற நம்பிக்கையே இல்லாமல் இருந்த நேரத்திலே, அவர்களை ஒன்றுபட வைத்து ஒரு சமாதான ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தி, பாலஸ்தீனியர்களுக்கென்று ஒரு பகுதியை அங்கே உருவாக்க இஸ்ரேலியர்கள் அனுமதித்து இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிக்க அரபு மக்களை ஏற்க வைத்து, இன்று உலகத்தில் புதிய சமாதானத்திற்கு வித்திட்ட இட்ஸ்ஹாக் ரபின் அவர்கள், சமாதானத்திற்காக உலகளாவிய பரிசைப் பெற்றிருந்ததோடு, சமாதானப் பேரணி ஒன்று அவருடைய நாட்டிலே, தலைநகரிலே நடந்த நேரத்தில் ஒரு வலதுசாரித் தீவிரவாதியால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டு இருப்பது உலகத்திற்கே ஒரு மாபெரும் இழப்பு. சமாதானத்தை விரும்புகின்ற அத்துணை பேருக்கும் ஏற்பட்டிருக்கின்ற அந்த இழப்பை, ஈடுசெய்ய முடியாத இழப்பை, நாம் இந்த நேரத்திலே கண்டிருக்கிறோம். எனவே, இஸ்ரேலிய சமாதானத்திற்காக உழைத்து, இன்று சமாதானத்திற்காக மறைந்த இஸ்ரேலியப் பிரதமர் இட்ஸ்ஹாக் ரபின் அவர்களுக்கு நமது சட்டமன்றத்தின் சார்பிலே இரங்கல் தீர்மானம் கொண்டு வந்திருப்பதை வரவேற்று, அவருடைய இஸ்ரேலிய மக்களுக்கும், நாட்டுக்கும், அவரைச் சார்ந்த குடும்பத்திற்கும் இரங்கலைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றிகூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உலக சமாதானத்தை உறுதிப்படுத்துகிற நடவடிக்கைக்கு வித்திட்ட இஸ்ரேல் நாட்டுப் பிரதமர் திருமிகு இட்ஸ்ஹாக் ரபின் அவர்களுடைய மறைவு குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித்

தலைவர்களும் இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிற இரங்கல் உரைகளோடு என்னுடைய உணர்வினையும் இணைத்துக் கொள்கிறேன். 45 ஆண்டுக்காலம் மேற்காசிய நாடுகளின் அமைதிக்குப் பங்கமாக இருந்த ஒரு பிரச்சினையில் துணிச்சலாக ஒரு முடிவை மேற்கொண்டு அதை நடைமுறைப்படுத்தி இன்றைக்கு உலகமே பாராட்டுகிற அளவுக்குப் பணியாற்றிய இஸ்ரேல் பிரதமர் அந்தப் பிரச்சினை காரணமாகவே ஒரு தீவிரவாதியாலே படுகொலைச் செய்யப்பட்டிருக்கிறார் என்பதை அறிகிறபோது, உலக சமாதானத்தை விரும்புகிற ஒவ்வொரு குடிமகனும் அதிர்ச்சியுற வேண்டிய நிலையிலேதான் இருக்கிறோம். பாலஸ்தீன விடுதலை இயக்கக் கோரிக்கைகளின் நியாயத்தை உலக நாடுகள் அனைத்துமே ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு காலகட்டத்தில் வற்புறுத்தி வந்த சூழ்நிலைகளிலே எல்லாம் இஸ்ரேலை ஆண்ட ஆட்சியாளர்கள் உலக நாடுகளின் அனைத்துக் குரலுக்கும் மதிப்பளிக்க மறுத்த சூழ்நிலையை மாற்றி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மிகக் குறுகிய காலத்திலேயே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகண்ட பெருமகன் இட்ஸ்ஹாக் ரபின் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது அவருடைய மறைவு என்பது உலக அமைதிக்கே பெரும் இழப்பு என்று சொன்னால் அது மிகையாகாது. அதுவும் இராணுவத் தளபதியாக இருந்த ஒருவர் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இதுவரையிலேயும் இருந்த சிவிலியன் சர்க்கார், சிவிலியன் தலைவர்கள் தலைவர்களாக இருந்த காலகட்டத்திலேயெல்லாம் செய்யாத ஒரு சமாதான உடன்படிக்கையை, இராணுவத் தளபதியாக இருந்த ரபின் செய்தார் என்பது அவருடைய சமாதான நோக்கத்துக்கும், இளகிய நெஞ்சத்துக்கும் எடுத்துகாட்டு என்று சொன்னால்கூட மிகையாகாது.

*முற்பகல் 10–30*

அப்படிப்பட்ட சிறப்புக்குரிய பெருமகன் ரபின் அவர்கள் கொடியவன் ஒருவனுடைய துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி, இன்றைக்கு உலக சமாதானத்தை விரும்புகிற அத்தனை மக்களும் அவருக்கு அஞ்சலி செலுத்துகிற அளவிற்கு ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது.

இந்திய அரசாங்கம் இன்றைக்கு இதைத் தேசிய அளவிலான இரங்கல் தினமாக அறிவித்திருக்கிறது. அந்த வகையில் இந்தப் பேரவை மூலமாக நம்முடைய இரங்கலை, சமாதானச் சிற்பியான ரபின் அவர்களுடைய மறைவுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே, இங்கே தெரிவித்திருக்கிற அனைவருடைய உணர்வுகளோடு

என்னுடைய உணர்வையும் மீண்டும் இணைத்துக்கொண்டு, இந்தப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் மறைந்த அப்பெருமகனாருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த அப்பெருமகனாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீவிரவாத வன்முறைக்குப் பலியான பெருமகனார், இட்ஸ்ஹாக் ரபின் அவர்களுடைய மறைவுக்கு அஞ்சலி செலுத்தி, அப்பெருமகனாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவையில் இன்று வைக்கப்பட்டுள்ள* இன்று எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த அரசின் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான உரையை நாளை (7-11-1995) வைத்துக்கொள்ளலாம் எனப் பேரவையின் அலுவல் ஆய்வுக் குழு இன்று முடிவு செய்திருக்கிறது. எனவே, அது பேரவையின் முன் அனுமதியுடன், நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை (7-11-1995) 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் 10.34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

---

* 15 முதல் 17 வரை இணைப்பாக வைக்கப்பட்டுள்ளது.

## 2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

*41.* தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் *1993–94*-ஆம் ஆண்டிற்கான இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை *(1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

*42.* தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் *1992–93*-ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை *(1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

*43.* தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் *1989–90*-ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை *(1989*-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *42/1989) 51(3)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

*44.* தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் *1990–91*-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை *(1989*-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *42/1989) 51(3)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*11.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்தெட்டாவது அறிக்கை, *1995–96.*

*12.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்தொன்பதாவது அறிக்கை, *1995–96.*

*13.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எழுபதாவது அறிக்கை, *1995–96.*

*14.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எழுபத்தொன்றாவது அறிக்கை, *1995–96.*

*15.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எழுபத்திரெண்டாவது அறிக்கை, *1995–96.*

## 2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

41. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் 1993–94–ஆம் ஆண்டிற்கான இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

42. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1992–93–ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

43. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் 1989–90–ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை (1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

44. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் 1990–91–ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை (1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

11. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்தெட்டாவது அறிக்கை, 1995–96.

12. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்தொன்பதாவது அறிக்கை, 1995–96.

13. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எழுபதாவது அறிக்கை, 1995–96.

14. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எழுபத்தொன்றாவது அறிக்கை, 1995–96.

15. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எழுபத்திரெண்டாவது அறிக்கை, 1995–96.

# இணைப்பு

(13-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## அறிவிப்பு

## 1995–96ஆம் ஆண்டிற்கான "கூடுதல் செலவிற்கான" மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| A. | வருவாய்க் கணக்கில் செலவு | |
| 8. | தேர்தல்கள்-- | 31,04,00 |
| 11 | மாவட்ட நிருவாகம்-- | 12,86 |
| 15 | காவல் துறை-- | 3,16,11 |
| 17 | கல்வி-- | 38,71,76 |
| 18 | மருத்துவம்-- | 20,00 |
| 19 | பொதுச் சுகாதாரம்-- | 1,00,00 |
| 20 | வேளாண்மை-- | 19,61,57 |
| 21 | மீனளம்-- | 63,36 |
| 22 | கால்நடை வளர்ப்பு-- | 15,50 |
| 23 | கூட்டுறவு-- | 4,63,00 |
| 25 | கைத்தறியும் துணித் தொழிலும்-- | 12,50,73 |
| 27 | ஊரக வளர்ச்சி-- | 29,10,01 |
| 28 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்-- | 33,76 |
| 29 | சமூக நலன்-- | 15,00 |
| 30 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்-- | 3,00,04 |
| 32 | வீட்டு வசதி-- | 1,00,00 |
| 34 | நுகர் பொருள் வழங்கல்-- | 13,10 |



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 6

*கோரிக்கை-தொடர்ச்சி* *(ரூபாய் ஆயிரத்தில்)*

| | | |
|---|---|---|
| **A.** | **வருவாய்க் கணக்கில் செலவு--தொடர்ச்சி** | |
| 36 | பொதுப் பணிகள்--கட்டிடங்கள்-- | 21,32 |
| 38 | சாலைகளும் பாலங்களும்-- | 35,00 |
| 39 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும்-- | 70,00 |
| 41 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்-- | 1,51,62 |
| 42 | பல்வகை-- | 15,96,51 |
| 43 | எழுதுபொருள்--அச்சுத் துறை-- | 1,08,18 |
| 46 | செய்தி--திரைப்படத் தொழில் நுட்பவியல்-- | 1,25,00 |
| 47 | ஊரகத் தொழில்கள்-- | 28,90,71 |
| 48 | குடிநீர் வழங்கல்-- | 24,65,70 |
| 49 | நகராட்சி நிருவாகம்-- | 8,85,00 |
| 50 | சுற்றுலா-- | 65,80 |
| 51 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு-- | 75,00 |
| **மொத்தம்--A.** | **வருவாய்க் கணக்கில் செலவு** | **2,30,40,64** |
| **B.** | **வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு** | |
| 53 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு-- | 4,15,23 |
| 55 | பொதுப் பணிகள்--கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு-- | 1,68,88 |
| 56 | சாலைகள்--பாலங்கள் குறித்த மூலதனச் செலவு-- | 2,99,33 |
| 60 | பல்வகை மூலதனச் செலவு-- | 11,01,86 |
| **மொத்தம்--B.** | **வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு ..** | **19,85,30** |

*1995 நவம்பர் 6]*

*கோரிக்கை-தொடர்ச்சி* *(ரூபாய் ஆயிரத்தில்)*

**C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்**

| | | |
|---|---|---|
| *61* | மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்-- | *35,12,75* |
| | **மொத்தம்--C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | ***35,12,75*** |
| | **பெரு மொத்தம் ..** | ***2,85,38,69*** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS